**அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கம் - 2015**

-----------------------------------------------------------------------------------------------

அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கக் கட்டளைச் சட்டத்தின் (283 அதிகாரம்) மற்றும் 1983 இன் 18 ஆம் இலக்க அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்க அதிகாரச்சட்டத்தின் 18(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. சங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சங்கத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

-----------------------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சங்கத்திற்குக் கிடைத்திருந்த நானாவித வருமானங்கள் மற்றும் ஏனைய பெறுவனவுகளான ரூபா 1,771,823 தொகையை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நடைமுறையல்லா பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 தொங்கல் கணக்குகள்

நீண்ட காலமாகக் காணப்படுகின்ற தொங்கல் கணக்கு மீதியான ரூபா 1,713,575 தொகையினைத் தீர்த்து கணக்குகளைச் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த மீதி மீளாய்வாண்டின்போது ரூபா 972,728 தொகையினால் அதிகரித்தமையின் காரணமாக நிறுவனத்தின் கணக்கேடுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1891 இன் 05 ஆம் இலக்க அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்க சேவைக் குறிப்பின் 16(1), (2) மற்றும் (3) ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டின் போது மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்வதற்காக புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ரூபா 850,000 கடன் தொகைக்குரிய மற்றும் பட்டப்பின் படிப்பிற்கான ரூபா 300,000 கடன் தொகைக்குரிய விதிகள் மற்றும் மேலும் ஆறு கடன் வகைகளின் கடன் பணத்தின் எல்லையினை அதிகரிப்பதற்குரிய விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் திருத்திய சேவைக்குறிப்பு | |
| (i) 10(1) ஆம் பிரிவு | அங்கத்தவர் ஒருவரின் இறப்பை அறிவித்து இரண்டு மாதங்களுக்குள் அவருக்கு உரித்தான உதவுதொகையை செலுத்த வேண்டிய போதிலும், கணக்காய்விற்கு |

சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய மரண உதவி தொகை தொடர்பான அறிக்கையின் பிரகாரம் முன்னைய ஆண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலும் மரணமடைந்த 30 பேர்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 1,425,000 மரண உதவு தெகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (ii) | II ஆம் அத்தியாயத்தின் 5(I) ஆம் பிரிவு மற்றும் 5(II) ஆம் பிரிவு | இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்ட வட்டி வீதத்திற்கு இணங்க வட்டி வீதத்தை மாற்றுவதற்கு கட்டுப்பாட்டு குழுவிற்கு முடியுமாக இருந்தபோதிலும் மத்திய வங்கியின் வட்டி வீதாசாரம் தொடர்பான மீளாய்வு மேற்கொள்ளப்படாமல் ஆதனக் கடனுக்காக வட்டி அறவிடப்பட்டிருந்தது. |
| (iii) | I ஆவது அத்தியாயத்தின் 7(ஆ)(i) ஆம் பிரிவு | 6 கடன் தவணைகளுக்கு மேல் நிலுவையாகவுள்ள அங்கத்தவர்களுக்காக சேவைக்குறிப்பிற்கு இணங்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக சங்கத்தின் நிதி விளைவுகள் ரூபா 39,486,478 மிகையாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 35,887,374 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,599,104 தொகை அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. ஊழியர் சம்பளச் செலவினம் ரூபா 2,109,136 இனால் அதிகரித்திருந்த போதிலும் வட்டி வருமானம் ரூபா 4,023,416 இனால் அதிகரித்தமை மற்றும் ஏனைய செலவினம் ரூபா 1,830,938 இனால் குறைவடைந்தமை நிதி விளைவின் அதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டினதும் முன்னைய நான்கு ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்தபோது நிதி விளைவுகளில் தொடர்ச்சியான அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது. ஊழியர் ஊதியம், வருமான வரி மற்றும் பெறுமானத்தேய்வு என்பவற்றை கவனத்தில் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 49,811,927 தொகையான பங்களிப்பு மீளாய்வாண்டில் ரூபா 64,515,298 வரை 30 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

**(அ) சங்கத்தின் நல்லாளுகைக்கான கட்டுப்பாட்டுக் குழுவின் பங்களிப்பும் கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டங்களுக்கான அங்கத்தவர்களின் பங்களிப்பும்**

நடாத்தப்பட்ட 30 மாதாந்த மற்றும் விசேட கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டங்களில் திறைசேரியினால் பிரதிநிதித்துவப்படுத்திய இருவரில் ஒருவர் 09 கூட்டங்களுக்கும், மற்றைய பிரதிநிதி 16 கூட்டங்களுக்கும் சமூகமளிக்காதிருந்ததுடன் மாதாந்தக் கட்டுப்பாட்டு குழு, மேலதிக கட்டுப்பாட்டுக் குழுக்கள் மற்றும் உப குழுக் கூட்டங்களுக்கு நியமிக்கப்பட்ட சில அங்கத்தவர்கள் அக்குழுக் கூட்டங்களுக்கு போதியளவில் பங்குபற்றியிருக்கவில்லை. இதனால், சங்கத்தின் அபிவிருத்தி தொடர்பாக தீர்மானம் எடுக்கும் போது, சில குழு அங்கத்தவர்களிடமிருந்து, போதியளவு பங்களிப்பு சங்கத்திற்குக் கிடைத்திருக்கவில்லை.

**(ஆ) அங்கத்துவம்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10,982 ஆக இருந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 2015 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் 11,887 வரை அதிகரித்திருந்ததுடன் 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை புதிய அங்கத்தவர்களாக 2,356 பேர் மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். அரச சேவைக்கு புதிதாக ஆட்சேர்க்கப்பட்டிருந்த அளவு கவனத்திற் கொள்ளவேண்டிய அளவு அதிகரித்திருந்த போதிலும் சங்கத்தின் அங்கத்துவத்தை அதிகரித்துக்கொள்வதற்காக போதியளவானதும் முறையானதுமான திட்டமொன்று பின்பற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு அங்கத்தவர்களின் வருகை**

கடந்த 5 ஆண்டுகளில் வருடாந்த பொதுக் கூட்டங்களுக்கு சமூகமளித்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை அண்ணளவாக 13 சதவீதமாக இருந்தது. சங்கத்தின் கட்டுப்பாட்டு சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தல், ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போது வாக்கெடுப்பை நடாத்துதல் மற்றும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போது பிரேரணைகளை நிறைவேற்றுதல் அதிக அங்கத்தவர்களின் பிரதிநிதித்துவ அடிப்படையில் இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறே சங்கத்தின் அபிவிருத்திக்காக தீர்மானங்களை எடுத்தல் கட்டுப்பாட்டுச் சபையின் பொறுப்பாக இருந்தமையால் கட்டுப்பாட்டுச் சபையினை தெரிவு செய்து நியமித்தல் பெரும்பாண்மை தரப்பினர்களின் பங்கபற்றலுடன் மேற்கொள்ள வேண்டிய தேவை தெடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அங்கத்தவர்கள் தொடர்பாக மெய்மையாய்வொன்று மேற்கொள்ளாமை**

சங்கத்தின் அங்கத்தவர்களின் உயிரியல் தரவுகள் தொடர்பாக மெய்மையாய்வைச் செய்வதன் மூலம் அங்கத்தவர்கள் தொடர்பாக கணக்குகளில் நீண்ட காலமாக தீர்க்கப்படாது காணப்படுகின்ற மீதியைத் (மரண உதவுதொகை உரித்து, கடன், பங்களிப்புப்பணம்) தீர்த்து வைப்பதற்கும் அங்கத்தவர்களின் நிலைத்திருத்தல் தொடர்பான விபரங்கள் (மரணித்தல், வதிவிடம் மாற்றமடைதல், வெளிநாடு செல்லல், அங்கத்துவம் இரத்துச் செய்யப்படல்) சேகரிக்க முடியுமான போதிலும் அவ்வாறான மெய்மையாய்வை மேற்கொள்வதற்கு சங்கம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 4.2 நிதி, கடன் மற்றும் சேமிப்பு முகாமைத்துவத்தின் நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் கடன் வட்டி மற்றும் பங்களிப்புப் பணம் செலுத்துதலைப் புறக்கணித்துள்ள 42 அங்கத்தவர்களும், பங்களிப்புப் பணம் மாத்திரம் செலுத்துவதைப் புறக்கணித்த 112 அங்கத்தவர்களும், உதவு தொகையைச் செலுத்தாதிருந்த 39 அங்கத்தவர்களும் காணப்பட்டனர்.

(ஆ) சங்கத்தின் பிரமாணக்குறிப்பின் விதி இலக்கம் 7ஆ(1) இன் பிரகாரம் சங்கத்திற்கு அறவிட வேண்டிய ஏதாவது தொகையொன்று அது செலுத்த வேண்டிய திகதி முதல் 06 மாத கால எல்லையில் செலுத்தாமையின் அடிப்படையில் அங்கத்துவம் இழக்கப்படுகின்றது. அவ்வாறு அங்கத்துவத்தினை இழந்த 22 பேர்களிடமிருந்து கடன் வட்டி மற்றும் பங்களிப்புப் பணமாக ரூபா 105,270 தொகையும், நிலுவையான பங்களிப்புப் பணமாக ரூபா 279,065 தொகையும் செலுத்த வேண்டியதாகக் காணப்பட்டது. அந்தப் பண அறவீடுகள் நிச்சயமற்ற நிலையில் இருந்தது.

(இ) கணனி முறைமையின் தகவல்களின் பிரகாரம் செயற்படும் அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்படாது காணப்படுகின்ற கடன் மீதி ரூபா 458,357 தொகை மற்றும் மரணமடைந்த 10 அங்கத்தவர்களிடமிருந்து நிலுவையாக இருந்த கடன் மீதிகளின்

கூட்டுத்தொகை ரூபா 722,906 ஆக இருந்ததுடன் அந்தக் கடன் மீதியை அறவிடுவதற்கு அல்லது ஏனைய பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

### 4.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அனுராதபுரம் கட்டுகெலியாவை ஓய்வு விடுதியை நிர்மாணிப்பதற்காக ரூபா 27,660,111 தொகையில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மேலதிக வேலைகளின் பெறுமதி ரூபா 12,747,735 ஆகும். அதாவது ஆரம்பத்தில் உடன்படிக்கை செய்யப்பட்ட ஒப்பந்தப் பணத்தில் 46 சதவீதமாகும். இந்தக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு மேலதிகமாக ஆரம்ப நிர்மாண நடவடிக்கைகள் ''மேலதிக வேலை'' ஆக மேற்கூறப்பட்ட ஒப்பந்தக்காரருக்கே அவரின் விலைகளில் நிறைவேற்றுவதற்கு கையளிக்கப்பட்டிருந்தது. செயற்பாடுகள் கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்பட்டு ஆகக் குறைந்த விலையில் நிறைவேற்றுதவதற்கு இயலுமை காணப்படும் போது பொருத்தமான ஒப்பந்தக்காரரொருவர் தெரிவு செய்யப்படாமையினால் சங்கத்திற்கு பாதகமான நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது.

### 4.4 நிதியத்தின் குறைப்பயன்பாடு

சங்கத்தின் 02 வங்கி நடைமுறைக் கணக்குகள் மீளாய்வாண்டின் சனவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை தொடர்ச்சியாக ரூபா 10 மில்லியனை விஞ்சிய வங்கி மீதி காணப்பட்டதுடன் அதனை ஆக்கபூர்வமான முதலீடாகப் பயன்படுத்தாமையின் காரணமாக பெறக்கூடியதாக இருந்த மேலதிக வருமானமொன்றை சங்கம் இழந்திருந்தது.

### 4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ள சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சங்கத்தின் தளத்தில் 3300 சதுர அடியான இட அளவு 08 மாதகாலம் முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்ததுடன் ஏனைய தரப்பினருக்கு வாடகைக்கு வழங்குவதற்கேனும் நடவடிக்கை எடுக்காது விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) சங்கத்தினால் 2013 ஆம் ஆண்டின் போது தளத்தில் இடத்திலிருந்து ஒரு பகுதி வெளியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனத்திற்கு சங்கத்தின் கட்டிடத்திலிருந்து அகற்றப்பட்டு 02 வருடங்களும் 03 மாதங்களும் கடந்திருந்த போதிலும் நிலுவை வாடகையான ரூபா 127,000 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

சங்கத்தால் 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு தரவுகளுக்கும் உள்ளவாறான தரவுகளுக்குமிடையே 43 விடயங்களில் 10 சதவீதம் முதல் 130 சதவீதம் வரையான குறிப்பிடத்தக்க அளவான முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சங்கத்தின் ஒருங்கிணைந்த செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | **கட்டுப்பாட்டுத்துறை** | **நலிவுகள் சுருக்கமாக** |
|---|---|---|
| (அ) | கணனி முறைமை | கணனி தகவல்களை சரியானதாக இல்லாமை, அங்கத்தவர் கடன் மற்றும் வைப்பு அறிக்கையிடல் நலிவானதாகவும் மற்றும் அங்கத்தவர் தகவல்கள் கணனி மயப்படுத்தப்படாமை. |
| (ஆ) | மரண உதவி வழங்கல் முறைமை | மரண உதவு தொகை செலுத்துவதில் தாமதம் |
| (இ) | அங்கத்தவர் கடன் | சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு கடன் வழங்குவதை அதிகரிப்பதற்காக நிலையான வைப்புகளுக்கு தொடர்புபடுத்துவதன் மூலம் எதிர்பார்த்த நலன்கள் நிறைவேற்றப்படாமை |